

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in | facebook.com/murasoli180 | twitter.com/murasoli180 | instagram.com/murasoli180 | youtube.com/murasoli180 | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 81 – ஒலி: 293 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 20 – சனிக்கிழமை 03 ஜுன் 2023 – திருச்சி ★★ 52+12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 81 - Issue 293: Thiruvalluvar Year - 2054 - Vaikasi 20 - Saturday 03 June 2023 - Trichy ★★ 52 + 12 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.6.2023) முகாம் அலுவலகத்தில், புதுடெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள் சந்தித்த போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொன்னாடை அணிவித்து, புத்தகம் வழங்கி வரவேற்றார். உடன் பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.6.2023) முகாம் அலுவலகத்தில், பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள் சந்தித்த போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொன்னாடை அணிவித்து, புத்தகம் வழங்கி வரவேற்றார். உடன் புதுடெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள் உள்ளார்.

## டெல்லியில் ‘ஆம் ஆத்மி’ அரசுக்கு எதிராக பா.ஜ.க. அரசு திட்டமிட்டு செயல்படுகிறது!

# ஒன்றிய அரசின் அவசரச் சட்டத்தை தி.மு.க. கடுமையாக எதிர்க்கும்!

## சென்னையில் டெல்லி – பஞ்சாப் முதலமைச்சர்களுடன் பேசிய பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

சென்னை, ஜுன் 3-

**டெல்லியில் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி அரசுக்கு எதிராக பா.ஜ.க. அரசு திட்டமிட்டு செயல்பட்டு, உச்சநீதிமன்றத் தீர்ப்பையும் மீறி அவசரச் சட்டம் பிறப்பித்துள்ளது. ஒன்றிய அரசின் அந்த அவசரச் சட்டத்தை தி.மு.கழகம் கடுமையாக எதிர்க்கும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்துள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்கள் நேற்று முன்தினம் (01.06.2023) முகாம் அலுவலகத்தில் டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் மற்றும் பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் ஆகியோரைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:–

தில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களும், பஞ்சாப் மாநிலத்தினுடைய முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களும் இன்று என்னை சந்தித்திருக்கிறார்கள்.

கெஜ்ரிவால் அவர்களைப் பொறுத்தவரையில், நான் டெல்லிக்கு செல்லுகிறபோதெல்லாம் அடிக்கடி அவரை சந்திக்கிற வாய்ப்பைப் பெறுவது உண்டு. டெல்லியில், மாடல் ஸ்கூல், மாடல் கிளாஸ் ரூம்ஸ் என்ற ஒரு அற்புதமான திட்டத்தை நடத்திக் கொண்டிருப்பதை அறிந்து, அதுபோல் தமிழ்நாட்டிலும் ஏற்படுத்த வேண்டும் என்று கருதி அந்த மாடல் பள்ளிகளை, மாடல் கிளாஸ் ரூம்களையெல்லாம் நானும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களும் நேரடியாகச் சென்று ஆய்வு நடத்தினோம். அதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படுகிறது, அதுவும் பெண்களுக்காக பல திட்டங்கள் நிறைவேற்றப்படுகிறது என்று உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

### புதுமைப் பெண் திட்டம்!

அந்தத் திட்டத்தில் ஒன்றாக மாணவியர்கள், பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு கல்லூரிக்குள் நுழைகிறபோது, அவர்களது கல்விக்கு உதவி செய்ய வேண்டும், நிதி உதவி வழங்கிட வேண்டும் என்று முடிவெடுத்து, ‘புதுமைப்பெண்’என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி அதன் மூலமாக மாதம் ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு வழங்கக்கூடிய ஒரு திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அந்தத் திட்டத்தை டெல்லி முதலமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து சிறப்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரும் ஒப்புதல் தந்து, வருகை தந்து அதை சிறப்பித்தார்கள்.

அப்படி வந்த நேரத்தில், கோட்டூர்புரத்தில் அமைந்திருக்கக்கூடிய அண்ணா நூற்றாண்டு நூலகத்தையும் பார்வையிட்டு பாராட்டி மகிழ்ந்தார்கள்.

டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் அவர்களைப் பொறுத்தவரை ஒரு நல்ல நண்பராக என்னோடு பழகிக் கொண்டிருக்கக்கூடியவர். நானும் அவரிடத்திலே நல்ல நண்பராக பழகிக் கொண்டிருக்கிறேன்.

டெல்லி முதலமைச்சருக்கு அதேபோல் அவர் சார்ந்திருக்கக்கூடிய அவர் தலைவராக இருக்கக்கூடிய ஆம் ஆத்மி கட்சிக்கு நெருக்கடி ஏற்படுத்த வேண்டும் என்று முடிவு செய்து, மோடி தலைமையில் இருக்கக்கூடிய பி.ஜே.பி. ஆட்சி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய ஆட்சியை சுதந்திரமாக செயல்படவிடாமல் பல்வேறு நெருக்கடிகளை தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறது.

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

கருத்துகளை

## கருத்துகளால் எதிர்கொள்வதே அறம்! கழுத்தை நெரிப்பது அல்ல!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஜுன் 3-

நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான், மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி ஆகியோரின் ட்விட்டர் கணக்குகள் முடக்கப்பட்டதற்கு கருத்துத் தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கருத்துகளை கருத்துகளாக எதிர்கொள்வதே அறம்! கழுத்தை நெரிப்பது அல்ல எனத் தெரிவித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளரான சீமானின் ட்விட்டர் கணக்கு திடீரென முடக்கப்பட்டது. சட்டப்பூர்வ கோரிக்கையை ஏற்று சீமானின் அதிகாரப்பூர்வ கணக்கு இந்தியாவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று ட்விட்டர் பக்கத்தில் விளக்கம் கொடுக்கப்பட்டு இருந்தது. மே 17 இயக்கத்தைச் சேர்ந்த திருமுருகன் காந்தி ட்விட்டர் பக்கமும் முடக்கப்பட்டது.

சீமான் ட்விட்டர் கணக்கை முடக்க சென்னை காவல்துறை பரிந்துரை செய்ததாக சமூக வலைதளங்களில் செய்தி பரவியது. இந்த நிலையில் சீமான் மற்றும் திருமுருகன் காந்தி உள்ளிட்டோரின் ட்விட்டர் கணக்கை முடக்க பரிந்துரை செய்யவில்லை என்று சென்னை காவல்துறை விளக்கம் அளித்துள்ளது.

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வலைதளப்பதிவு வருமாறு:-

**நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் சகோதரர் திருமுருகன் காந்தி உள்ளிட்டோரது ட்விட்டர் கணக்குகள் இந்தியாவில் முடக்கப்பட்டிருப்பது கண்டனத்திற்குரியது. கருத்துகளை கருத்துகளால் எதிர்கொள்வதே அறம். கழுத்தை நெரிப்பது அல்ல. ட்விட்டர் முடக்கத்தை விலக்கிச் சமூக வலைதளத்தை அதற்கான தரத்துடன் செயல்பட அனுமதிக்க வேண்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



### தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பிதழ்!

12 – பக்கங்கள் இலவச இணைப்பு!

தமிழினத் தலைவர்

## கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பிதழ்!

### ஜுன் 3 - அன்று வெளிவருகிறது!



தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி 3.6.2023 அன்று, அவருடைய மூத்த பிள்ளையான “முரசொலி”, தனது மூல முழுமுதல் ஆசிரியரான கலைஞரைப் போற்றி, சிறப்பிதழ் வெளியிட்டுப் பெருமை கொள்கிறது!

**இந்த ஆண்டு (2023-2024) முழுவதும், ஒவ்வொரு திங்களும் மூன்றாவது நாளன்று, கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பிதழ் வெளிவரும்.**

ஒவ்வொரு சிறப்பிதழிலும், ஒவ்வொரு பிரிவின் சான்றோர்தம் எழுத்தோவியங்கள் இடம் பெறும். அந்த வகையில், திரை உலக ஆளுமைகள் - கவிஞர் பெருமக்கள் - மருத்துவ வல்லுநர்கள் - பத்திரிகை, ஊடகத் துறையினர் எனப் பலரும் பங்கேற்கும் “முரசொலி சிறப்பிதழ்கள்” தொடர்ந்து அணி சேர்க்கும்.

3.7.2023 முரசொலி இதழுடன், கலைஞர் குறித்து, கவிஞர்களின் கற்கண்டுக் கவிதைச் சிறப்பிதழ் வெளிவரும்.

காலமெல்லாம் அலைகடலென நீடிக்கும் கலைஞரின் புகழை, அனைவரும் நாளெல்லாம் போற்றிடுவோம்!

**- ஆசிரியர்.**

## கோடை விடுமுறை: சென்னை திரும்ப சிறப்புப் பேருந்து வசதி!

*சென்னை, ஜுன் 3-*

*தமிழகத்தில் ஏப்ரல் மாதம் இறுதியில் இருந்து பள்ளிகளுக்கு கோடை விடுமுறை விடப்பட்டது. மே மாதம் முழுவதும் விடுமுறைக்கு பிறகு ஜுன் 1ந்தேதி பள்ளிக்கூடம் திறப்பதாக இருந்தது. ஆனால் வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் ஜுன் 7ந்தேதிக்கு பள்ளிகள் திறப்பது தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில்கோடை விடுமுறைக்கு சொந்த ஊர், சுற்றுலா தலங்கள் சென்றவர்கள் பள்ளி திறப்பது தாமதம் ஆனதால் பயணத்தை தள்ளி வைத்தனர். மேலும் ஒரு வாரம் கழித்து பள்ளிகள் திறப்பதால் வெளியூர் சென்றவர்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு வருவது தள்ளிப்போகிறது. 3ந்தேதியில் இருந்து 6ந்தேதி வரை வெளியூர் பயணம் அதிகரிக்கும் என்று போக்குவரத்துக் கழக அதிகாரிகள் எதிர்பார்க்கிறார்கள்.*

*அதனால் அரசு போக்குவரத்துக் கழகத்திலும் உள்ள பேருந்துகளை முழு அளவில் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீண்டதூரம் செல்லக்கூடிய அரசு விரைவு பேருந்துகளில் முன்பதிவு அதிகரித்துள்ளது. எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்த வருடம் பொதுமக்களின் பேருந்து பயணம் அதிகரித்து இருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். வெளியூர் சென்றவர்கள் சொந்த ஊர் திரும்ப வசதியாக ‘கூடுதல் பேருந்துகளை’ பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. வருகிற 5ந்தேதியில் இருந்து சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுகுறித்து போக்குவரத்து கழக அதிகாரிகள் கூறியதாவது:-*

*சென்னையில் இருந்தும் பிற நகரங்களில் இருந்தும் மக்கள் அதிகளவில் பயணம் செய்கிறார்கள். திருமணம், உள்ளிட்ட சுபகாரியங்கள் அதிகம் நடப்பதால் வெளியூர் பயணம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தினமும் சென்னையில் இருந்து இயக்கப்படும் 2,200 பேருந்துகள் தவிர கூடுதலாக 500 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதேபோல வெளியூர்களில் இருந்தும் சென்னைக்கு கூடுதலாக பஸ்கள் இயக்கப்படுகிறது. ஆனாலும் மக்கள் கூட்டம் எதிர்பாராமல் வருகிறது. குறிப்பாக நள்ளிரவு நேரத்தில் வந்தால் திடீரென பேருந்து வசதியை எவ்வாறு ஏற்படுத்தி கொடுக்க முடியும். வெளியூர் செல்பவர்கள் முன்பதிவு செய்தால் அதனை கணக்கிட்டு தேவையான பேருந்து வசதியை ஏற்படுத்தி தர முடியும். விழுப்புரம், சேலம், மதுரை, கோவை, கும்பகோணம் ஆகிய போக்குவரத்துக் கழகத்தில் இருந்து கூடுதலாக பேருந்துகள் பெறப்பட்டு கூட்டத்தை சமாளிக்கதிட்டமிட்டுள்ளோம். 7ந்தேதி வரை சிறப்பு பேருந்துகள் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.*